தறப் பந்தல், கதிரைகள்,
சில்வர் கப், பீங்கான்
இன்னும் பல
உபகரணங்களை
வாடகைக்கு பெற
நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our Service available
OLI ILLAM
210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 02 செவ்வாய்க்கிழமை (15 03 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 108

# மன்னாரில் அதிரடி!
# பொலீஸார் மூவர் பலி!!

## ஆயுதங்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 15

மன்னாரில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் ஒரு வார காலத்தில் மூன்றாவது தடவையாக புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினர்,

நேற்று அதிகாலை 12.50 மணியளவில் நடத்தப்பட்ட இந்த அதிவேக அதிரடித் தாக்குதலில் மூன்று பொலீஸார் உயிரிழந்தனர். அவர்களின் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

மன்னார் நீதிமன்றத்திற்கும் கறிச்சட்டிப் பாலத்திற்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்திருந்த இரண்டு பொலீஸ் காவல் அரண்கள் மீதே புலிகள் இத்தாக்குதலை நடத்தினர்.

கடந்த புதன்கிழமை தாராபுரம் பொலீஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட விடுதலைப் புலிகள் போராளிகளின் நினைவாக இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் 3 நிமிட நேரம் மட்டுமே இடம்பெற்றது. தாக்குதலுக்குள்ளான ஒரு காவலரணில் எவரும் இருக்கவில்லை; மற்றைய காவலரணில் இருந்த மூன்று பொலீஸாரே கொல்லப்பட்டனர்.

தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

(உ-த-எ)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மன்னாரில் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரி-56 ரக துப்பாக்கிகள் — 3
- ★ அதற்கான மகஸின்கள் — 9
- ★ நடுத்தர ரவைகள் — 456
- ★ ஏ. கே. ஹோல்ஸர்கள் — 2
- ★ ரவைப் பெட்டி — 1
- ★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் — 5

## பலாலி முகாம் ஷெல்கள் வடமராட்சியில் வெடித்தன

வடமராட்சி, மார்ச் 15

வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்றிரவு 7.30 மணியளவில் பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களினால் ஒருவர் அதிர்ச்சியால் மரணமுற்றார்; ஒரு மாணவி காயமடைந்தார்; பெறுமதி மிக்க பசு ஒன்று உயிரிழந்தது; சில வீடுகள் சேதமுற்றன.

வல்வை, நெடியகாட்டு ஆலய பிரதேசம், தெணியம்பை, இலந்தைக்காடு ஆகிய பகுதிகளிலேயே ஷெல்கள் விழுந்தன.

நெடியகாட்டுப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் சிவராசா ஈஸ்வரி (வயது 15) என்னும் மாணவி படுகாயமுற்றார். அவர் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இலந்தைக்காட்டில் விழுந்த ஷெல்லினால் வீடு ஒன்று பலத்த சேதமுற்றது. அங்கு கட்டி நின்ற நிறைமாதப் பசு ஒன்று பரிதாபமாக உயிரிழந்தது.

தெணியம்பைத் தெரு சில்லாலை என்ற இடத்தில் விழுந்த ஷெல்லினால் ஒரு வீடு பலத்த சேதமுற்றது. வீட்டில் இருந்தோர் அவ்வேளை ஆலயத்திற்குச் சென்றிருந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் ஆட்டத்தின் போது
## பிஸ்டல் காட்டி பயமுறுத்திய ராணுவ பிரிகேடியரின் மகன்!

கொழும்பு, மார்ச். 15

கொழும்பு எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் றோயல்—தோமியன் கிரிக்கெட் போட்டியின் போது சட்டத்தரணி ஒருவரை பிஸ்டலைக் காட்டி பயமுறுத்தியதாக சொல்லப்படும் சம்பவம் குறித்து இராணுவ பிரிகேடியர் ஒருவரின் மகனை சுறுவாக்கோடு பொலீஸார் விசாரணை செய்யவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பிரிகேடியரின் மகன் உட்பட சிலர் வேறு சிலருடன் ரகளை செய்தனர் என்றும்—

அதனைத் தணிப்பதற்கு சட்டத்தரணி தலையிட்ட போது அவரின் கன்னத்தில் பிரிகேடியரின் ஆட்கள் அடித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## ஈரலைத் தாக்கும் நோய் எலிகளால் பரவும் ஆபத்து!

### மக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 15

எலிகளினால் பரப்பப்படும் — "லெப்ரோஸ்பைரோஸிஸ்" என்னும் ஈரலைத் தாக்கும் நோய் — பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் காணப்படாத இந்நோய் அண்மையில் இங்கு ஒருவருக்கு ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தீவிர சிகிச்சையின் பின் அவர் குணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

எலிகள் அதிகரித்துள்ள இடங்களிலும் அவற்றின் கழிவுப் பொருள்களால் அசுத்தப்படும் உணவுப் பொருள்களிலும் இந்நோய்க்கான பக்றீரியாக்கள் காணப்படும். இவை பின்னர் மனித உடலை அடைந்து ஈரலைத் தாக்குவதால் செங்கண்மாரி போன்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப...... அறுபதாயிரம் கள்ள வோட்டுகளைப் போட ஆயத்தம் செய்வினம் எண்டு சொல்லுங்கோ......!

## ஆனையிறவில் குண்டு வீச்சு!

சாவகச்சேரி, மார்ச் 15

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. அதனைத் தொடர்ந்து ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(உ-31)

தென்மாகாணத் தேர்தல்

# 30,000 வாக்குகளால் எதிரணி வெல்லும்!

## சி. ஐ. டியினர் அரசுக்கு தகவல்

கொழும்பு, மார்ச் 15

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தென்மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளினால் வெற்றி பெறும் என்று இரகசியப் பொலீஸார் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்களாம்,

மிகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தமக்கு இத்தகவல் கிடைத்திருப்பதாக தென்மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடும் திரு. அமரசிறி தொடங்கொட கரந்தெனியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய போது தெரிவித்தார்.

சிறிய இலங்கை நாட்டில் மூன்று கல்வி அமைச்சர்கள் உள்ளனர். அனுரா பண்டாரநாயக்கா உயர்கல்வி அமைச்சரான நாள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன — இவ்வாறு நுவரெலியா மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியான ஆனந்த தஸநாயக்கா தெரிவித்தார்

(உ-எ-6)

## எதிரணி இறுதிக் கூட்டம்: பொலீஸார் அனுமதி மறுப்பு

கொழும்பு, மார்ச் 15

தென்மாகாண சபைத் தேர்தலை ஒட்டி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி காலி நகரில் இம்மாதம் 21 ஆம் திகதி நடத்தவிருந்த இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு வழங்கப்பட்ட அனுமதியை பொலீஸார் ரத்துச் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பிரசாரக் கூட்டத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா "லங்காதீப" பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

(உ-எ-6)

## தேர்தல் பிரசாரங்களில் லலித்தின் மனைவியும் தீவிரம்

கொழும்பு, மார்ச் 15

தென்மாகாணத் தேர்தல் பிரசாரங்களில் மறைந்த லலித் அத்துலத் முதலியின் மனைவியான சிறிமாணி அத்துலத் முதலியும் பங்குபற்றி வருகிறார்.

அவர் தென்மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய போது —

'தமது கணவரை விடுதலைப் புலிகள் கொல்லவில்லை' — என்று கூறினார்.

தமது கணவர் மறைந்த லலித் அத்துலத் முதலியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களை மீண்டும் தெரிவு செய்து அனுப்பும் படி அவர் தென்மாகாண வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார்.

## இலங்கையில் 170 பேரில் ஒருவர் ராணுவச் சிப்பாய்

### எண்ணிக்கை வீதம் இங்குதான் அதிகம்

கொழும்பு, மார்ச். 15

இலங்கையில் 170 பேருக்கு ஒருவர் இராணுவச் சிப்பாய் என்றும்—

ஆசியாவிலேயே இலங்கையில் தான் படையினரின் எண்ணிக்கை வீதம் அதிகமாக உள்ளது என்றும்—

'சமூக நீதி' என்ற ஆங்கில சஞ்சிகையில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகை சமய, சமூக நிலையத்தினால் வெளியிடப்படுகின்றது.

இலங்கையில்—

4150 பேருக்கு ஒருவர் டாக்டர், 1,850 பேருக்கு ஒருவர் தாதி, 21 ஆயிரம் பேருக்கு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கே வருகை தரும் பாப்பரசர் வடக்கேயும் வருகை தர வேண்டும்

### மேய்ப்புப்பணி மாநாட்டின் முடிவில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யோசப் வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் அளிக்கும் நிகழ்விற்காக அடுத்த ஜனவரியில் கொழும்புக்கு வரவிருக்கும் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வடக்கே வரவேண்டும்.

— இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று நேற்று முடிவுற்ற யாழ். கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

"அருட்தந்தையின் வருகையை மகிழ்வோடு வரவேற்கிறோம்.

"தென்னிலங்கைக்கு வரும் அருட்தந்தை அங்கு பங்குபற்றும் நிகழ்ச்சிகளுக்கு வடபகுதி மக்கள் இன்றைய சூழ்நிலையில் செல்லமுடியாது.

"ஆகவே —

"அருட்தந்தை வடக்கே வருகை தரவேண்டும். அல்லது —

"வடபகுதி மக்கள் அங்கே செல்லக்கூடியதாக கிளாலி கடலேரியூடாகச் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி அல்லது சங்குப்பிட்டி பாதையைத் திறந்து சுமுகநிலையை ஏற்படுத்த வேண்டும். அல்லது —

"நாட்டில் சுமுக நிலை ஏற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வில்பத்து தாக்குதல் சம்பவம் பற்றிய விசாரணை நடைபெற்ற போது
## சிப்பாய் சுட்டுத் தற்கொலை!

கொழும்பு, மார்ச் 15

கடந்த 8 ஆம் திகதி வில்பத்துவில் இடம்பெற்ற தாக்குதல் வெளியில் இருந்து நடத்தப்படவில்லை. இரு இராணுவ முகாம்களுக்கு இடையிலேயே இம் மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது,

அச்சம்பவம் குறித்து நேற்று முன்தினம் இராணுவம் விசாரணை ஒன்றை நடத்தியது என்றும் —

அந்த விசாரணையின் போது லான்ஸ் கோப்ரல் ஒருவர் வேறொருவரிடம் இருந்த துப்பாக்கியைப் பறித்து எடுத்து தம்மைத் தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்றும் —

உயிரிழந்த சிப்பாய் மஹநுவரை தெற்கைச் சேர்ந்த 24 வயதான எஸ். பிரேமசிறி என்றும் அடையாளம் காணப்பட்டார்,

அனுராதபுரம் பதில் நீதிவான் டி. இலங்கசிங்க சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று மரண விசாரணை நடத்தினார்.

(உ-எ-6)

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 15

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(உ 3)

## நரோமா இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 15

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் 'நரோமா' கப்பல் இன்று காலை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் கொழும்பு செல்வதற்கு பதிவு செய்தவர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் [illegible] மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

## ஈழ அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு எதிராக சுவிஸில் அழுத்தம் கொடுப்போம்

### யாழ். வந்துள்ள அகதிகள் சபைப் பிரதிநிதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் படும் இன்னல்களையும், அவலங்களையும் காண முடிந்தது. யாழ். மக்கள் சோகமயமானவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சுவிஸிலிருந்து ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவது நியாயமற்றது. மனித நேயமற்றது.

சுவிஸ் திரும்பியதும் இதனை எமது அரசுக்கு எடுத்துச் சொல்லி, ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முடிவுக்கு எதிராக சுவிஸ் அகதிகள் சபை (சுவிஸில்) [illegible] அழுத்தம் கொடுப் போம்.

—இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார் சுவிஸ் அகதிகள் சபையின் பிரதிநிதி திரு எரிக் சிமித்.

சுவிற்சர்லாந்திலிருந்து ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடிய சூழ்நிலை உண்டா என்பதனை ஆராய்வதற்காக சுவிஸ் அகதிகள் சபையைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

தூதுக்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு. எரிக் சிமித் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

திரு சிமித் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட, சேதமடைந்த பகுதிகளை பார்வையிட்டுள்ளார். பல தரப்பட்ட மக்களையும் சந்தித்து நிலைமையை நேரில் கண்டறிந்துள்ளார். மக்கள் படும் கஷ்டங்களை வீடியோ படமும் எடுத்துக் கொண்டார்.

திரு. சிமித் உதயனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

சுவிஸின் அரசியல் தஞ்சம் கோரிய ஈழத் தமிழர்களில் 92 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கு பின்னர் அங்கு வந்தவர்களை— இலங்கைக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது.

இந்த முடிவின் பிரகாரம் வருடாந்தம் 300 தமிழ் அகதிகளை திருப்பி இலங்கைக்கு அனுப்பவும்—

அவர்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரியின் மேற்பார்வையில் பராமரிக்கவும் — சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் இந்த முடிவுக்கு அகதிகளுக்கான சபை ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பாது காப்பு வலயத்துள், போதனா வைத்தியசாலைக்கு பின்னால் விக்ரோறியா வீதியில், கபாஸ் ஹோட்டலுக்குப் பக்கத்தில் பிரயோசனத்துடன் கூடிய நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இல. 55, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (29898)

நில அளவையாளர் பயன்படுத்தும் உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 932, மே/பா, உதயன். (சி-7448)

### காணி விற்பனைக்கு

ஊரெழு பலாலி வீதியில் 12 அடிப் பாதையுடன் "கோணாவளை" என்ற தோட்டக்காணி 12½ப் பரப்பு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: திருமதி பா. வன்னியசிங்கம், "வைரவர் கடாட்சம்" பலாலி வீதி, கரியப்புல வைரவர் ஆலயம் அருகில் திருநெல்வேலி. (29896)

### கோழிக்குஞ்சு விற்பனை

கைலன் பிறவுண் ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை இழுக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29880)

### மணமக்கள் தேவை

நட்சத்திரம் மகம், உதயச் செவ்வாய் 34 வயது. இந்தப் பெண்ணுக்கு அரச கூட்டுத்தாபன, வங்கி ஊழியர் அல்லது சொந்த தொழில்புரியும் மணமகனும் பூசம் நட்சத்திரம் 38 வயது, வெளிநாட்டு உதவிக் கணக்காளருக்கு நல்ல தோற்றமுள்ள படித்த 28—34 வயது மணப்பெண்ணும் தேவை. 930, மே/பா உதயன். (7131)

### இலவச திருமண சேவை

27 வயது, உத்தராடம், செவ்வாய் 7. இராகபாவம் 34, நோர்வேயில் Engineer கடமை புரிபவருக்கு மணப்பெண் தேவை. Sponsor மூலம் அழைக்கலாம். மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவலடி. (29897)

### ஜாதகக் குறிப்பு

நோர்வே, சிங்கப்பூர், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு ஜாதகக் குறிப்பு உடனே எழுதிக் கொள்ளலாம். சிவா, இல. 712, நாவலர் வீதி, அரியாலை. (29892)

### சீயாக்காய்ப் பவுடர்

கூந்தல் வளர்ச்சி உங்களுக்கு ஒரு தனி மகிமை. உன்னதமான முடி வளர்ச்சி, இளமைத் தோற்றப் பொலிவின் இரகசியம். காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கி பாவியுங்கள். (29869)

### தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் G V. Kanesalinkam. இல. 298, K. K. S. Road, Jaffna. (29112)

## பொம்மை காட்சி

தவக்காலத்தை ஒட்டி சிறுவர்களுக்கான திருப்பாடுகளின் காட்சி (பொம்மைக் காட்சி) யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பிரதான வீதிக் கலையரங்கில் காட்டப்பட இருக்கிறது.

இன்று 15 ஆம் திகதியும் 16 ஆம், 17 ஆம் திகதிகளிலும் தினமும் மாலை 6-45 மணிக்கு காட்சிகள் ஆரம்பமாகும். (க-51)

## அன்பளிப்பு

கொழும்புத்துறை மகா வித்தியாலய திறம் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒரு தொகை அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது

---

அருள்மிகு தாவடி
அம்பலவாண வேதவிநாயகர் ஆலய
## மகா கும்பாபிடேக மண்டல கால கம்பராமாயண இலக்கியப் பேருரை
(48 நாட்கள்)
## பூர்த்தி விழாவும் பட்டமளித்துப் பாராட்டும் விழாவும்

காலம்:- 16 — 03 — 94 (புதன்கிழமை)

பேருரை நிகழ்த்தியவர்:

**திரு. தீ. சிவகுமாரன்** அவர்கள்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம் ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

வழங்கப்படும் கௌரவ பட்டம்:

**கம்ப கலா சுரபி**

விழாத் தலைவர்:
திரு. க. தேவராசா அவர்கள்
(தலைவர், ஆலய நிர்வாக சபை)

பாராட்டுபவர்கள்:
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
(அதிபர், தர்ம சாஸ்தா குருகுலம், இணுவில்)
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா. ஜெயராசா
(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)
பண்டிதர் சி. ஆறுமுகம்
திரு. செ. சத்தியமூர்த்தி
(விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி யாழ்.)
திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)

இத்துடன் ஆலய சிவாசாரிய
சிவஸ்ரீ கு. பரசிவக் குருக்கள்
ஓவியக் கலைஞர் திரு சுந்தரலிங்கம்
ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

நன்றியுரை:
திரு இ. சரவணபவன்
(செயலாளர், ஆலய நிர்வாக சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆலய நிர்வாகசபை.

அன்பளிப்பு:
கே. கே. இராஜரத்தினம் நகைமாளிகை
277, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி-7557]

---

## பிரிவுபசார விழாவும் விருந்தும்

பேராசிரியர்
அ. துரைராஜா
துணைவேந்தர்

1994 - 03 - 26 மாலை 5-00 மணிக்கு மேற்படி நிகழ்ச்சி யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் பல்கலைக்கழக பதிவாளருடன் 1994 03 18 மாலை 3-00 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் துரைராஜா அவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள அறக்கொடைப் புலமைப் பரிசிலுக்கு நிதி வழங்க விரும்புவோர் அதற்கான நிதியினைப் பதிவாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994 03-11 [சி-7548]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 09 — 1935
மறைவு: 23 — 02 — 1993

### அமரர் இ. செ. கணேசன்
(உரிமையாளர் கணேசன் ஸ்டோர்ஸ் - மட்டக்களப்பு, சிசக்தி களஞ்சியம் - கைதடி)

எம்மை யெல்லாம் சீராக வளர்த்து
ஆளாக்கிய தெய்வமே! - நீங்கள்
மறைந்து ஆண்டு ஒன்று ஆகிவிட்டது.

உங்கள் ஆசீர்வாதம் என்றும் எம்மோடு இருக்க வேண்டும்.

ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்:
மனைவி, மக்கள்
பேரப்பிள்ளை

"சிவ இல்லம்,
கண்டி வீதி,
கைதடி.

---

யாழ். கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

காலம் 20 - 03 - 1994 பிற்பகல் 4-00 மணி
இடம்: கல்லூரி பிரதான மண்டபம்

இக்கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

வி. மாணிக்கம், தலைவர்.
சி. தனபாலசூரியர், செயலாளர்
(29902)

---

ENGLISH
LANGUAGE LITERATURE
A. S. LAWRENCE

| | |
|---|---|
| வர்த்தகம் | — A. அகஸ்ரீன் |
| விஞ்ஞானம் | — G F. லூயிஸ் |
| கணிதம் | — Kana பரராசசேகரன் |
| தமிழ் | — Mrs. S. சிகாமணி |

ஆண்டு 6 7 8 9 10
**G. C. E (O/L) 94**
வகுப்புகள் நடைபெறுகின்றன.

**BRIGHTON INSTITUTE**
FLETCHERS LANE. CHUNDIKULI
[29900]

---

## தசாக அழைப்பு

திருமதி
### இராசம்மா விசுவநாதக் குருக்கள்

7 3 94 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் தாயார் திருமதி இராசம்மா விசுவநாதக் குருக்கள் அவர்களின் தசாகக் கிரியை நாளை (16-3-94) புதன் காலை எங்கள் இல்லத்தில் நடைபெறும். ஏனைய கிரியைகள் அடுத்து வரும் தினங்களில் நடைபெறும். மேற்படி கிரியைகளில் அனைவரும் தயவுசெய்து கலந்து கொள்ளவும். தனிப்பட்ட அழைப்பு இல்லை.

வி. ஜெகதீஸ்வர சர்மா
(ஆசிரியர்),
வி. சாமிநாதன்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (29899)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவமணி கனகரத்தினம்

மண்ணின் மடியில்: 22 — 11 — 1922
இறைவன் திருவடியில்: 07 03 — 1992
திதி: 15 — 03 — 1994

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

அன்புள்ள அம்மா! நீங்கள் ஆத்ம சாந்தியடைந்து இறைவன் திருவடியில் நித்திய நிலையை அடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆ. கனகரத்தினம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
[29901]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 05 — 1921
மறைவு: 26 — 03 — 1993

### திருமதி சுப்பிரமணியம் பூரணம்
திதி: 15 — 03 — 1994

எங்கள் அன்பின் குடும்ப விளக்காய், பாசத்தின் ஒளியாய், இதயத்தின் தெய்வமாய் திகழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் பூரணம் சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

சு. செல்வராஜா,
(மகன்)
158/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (29907)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 06 — 02 — 1983
உதிர்வு: 30 — 01 — 1994

### செல்வன் திருநாவுக்கரசு கார்த்திக்
(மாணவன், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை)

அரிய பல கலைகள் கற்று அறிஞன் ஆவேன் என்று
பிரியமுடன் கற்று வந்த உன்னை
கொடிய நோய்தான்
ஐயிரண்டு வயதினிலே கொண்டு சென்றதேனோ - என்று

அறிய முடியாதேங்குகிறோம் இங்கு

எமது அன்புச் செல்வத்தின் மரணச்செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்குபற்றி ஆறுதல் கூறிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெற்றோர் சகோதரர்கள்,
உற்றார், உறவினர்

பிறவுண் வீதி,
(கொக்குவில் ஸ்ரேசன் முன்பாக
கொக்குவில் [7133]

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 31 12 1960
உதிர்வு: 21 — 03 1988

### திருமதி உமாபதி தவம்
திதி: 15-03-1994

எமது அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்த நீர் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்டீர். உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
அம்மா, அண்ணா, அண்ணி,
உறவினர், நண்பர்கள்.

பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி. (29080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## உடம்பு புரட்ட முயல்வாரா பிரதமர்

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர், "இந்து" நாளிதழுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், தமிழர் பிரச்சினை பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுத்துரைத்திருக்கிறார்.

அவரது அந்தச் செவ்வியில்—

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வேறு மாற்றுவழி இல்லாமையினாலேயே இராணுவ நடவடிக்கையையே தொடர வேண்டியுள்ளது — என்று பிரதமர் கூறியிருப்பது வேடிக்கையானதாகும்.

மாற்றுவழி ஒன்றைக் காண்பதில் அரசுக்கு மனவிருப்பம் இல்லாத போது, அதற்கான வழி பிறப்பது எப்படி? மனம் இருந்தால் இடமுண்டு; செயற்பாடும் தானாகவே உதிக்கும். தான் நினைத்ததையே அல்லது சொல்வதையே தமிழர் தரப்பினர் ஏற்க வேண்டும். அல்லது செய்ய வேண்டும் என்று அரச அழுங்குப் பிடியாகவே நின்றால் மாற்றுவழி எங்கிருந்து வரும்?

இராணுவ நடவடிக்கைக்கு-இராணுவத் தீர்வுக்கு — மாற்றுவழி அரசியல் தீர்வாக மட்டுமே இருக்க முடியும் இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டு, உணர்ந்து கொண்டு, அதனை நாடிச் செயற்பட்டால் இப்போதுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்கிவிடலாம்.

விடுதலைப் புலிகள் தாம் அரசியல் தீர்வுக்குத் தயார் என்றும் தமது கோரிக்கைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றைத் தந்தால் அதனைப் பரிசீலிக்கத் தயார் என்றும் மீண்டும் மீண்டும் கூறிவருகிறார்கள். கடந்த வாரம் கூட சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட செய்தியில் தலைவர் பிரபாகரன் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது என்பதனை மிகத் தெட்டத் தெளிவாக கூறியிருக்கிறார்.

ஆனால் அரசாங்கம் திறந்த மனதுடன் அதனைக் கருத்திற்கொண்டு பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் கவனம் செலுத்துவதாக இல்லை. தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை நீக்கி, விடுதலைப் புலிகள் வெளிப்படுத்திய சமிக்ஞைகளுக்குப் பதில் சமிக்ஞை காட்டுவதற்குத் தயாராகஇல்லை.

அது பற்றி எவ்வித அக்கறையும் காட்டாமல் இருந்து கொண்டு, "பந்து இப்போது புலிகளின் பக்கமே உள்ளது" என்றும்—

"விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதானால், அவ்வாறு வருகின்ற பிரதிநிதிகள் குழுவுக்கு பிரபாகரனே தலைமை வகிக்க வேண்டும்" என்றும்— கூறுவது அர்த்தமற்றதும் தட்டிக்கழிப்புமாகும்.

எந்தச் செயலையும் படிமுறைப்படியே செய்ய வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் பாடசாலைக்குச் சென்று மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்ற முடியுமா? முதலில் உடம்பு புரட்ட வேண்டும். பின்னர் தவழ வேண்டும். அதன் பின் மெல்ல மெல்ல நடக்க வேண்டும் என்று எத்தனையோ படிமுறைகள், பருவ வளர்ச்சிகளைக் கண்ட பின்னரே அவன் மைதானத்துக்குப் போக முடியும்.

அதேபோல, அரசுக்கு அரசியல் தீர்விலும், பேச்சுக்களிலும் நாட்டம் இருந்தால் பொருளாதாரத் தடை- போக்குவரத்துத் தடைகளை நீக்கி உடம்பு புரட்டட்டும் பார்க்கலாம்!

சமாதானத் தீர்வுக்கும், பேச்சுவார்த்தைக்குமான அடித்தளத்தை அமைக்காமல், ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல்—

எடுத்த எடுப்பிலேயே தலைவர் பிரபாகரன் பேச்சுக்கு வர வேண்டும், பந்து விடுதலைப் புலிகள் பக்கமே என்று கூறுவது அத்திவாரம் இல்லாமல் வீடு கட்டப்போவதாகக்கூறும் முட்டாள்தனம், இந்த நிலைப்பாட்டிலேயே அரசு நின்றால் மாற்றுவழி பிறப்பது எப்படி?

---

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விவகாரம்:

# அமைச்சுக்கு விவர அறிக்கை கல்வி திணைக்களம் அனுப்பும்

### ஒன்றிணைக்கும் முயற்சிக்கு கல்விமான்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

கோப்பாய் — பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளை ஒன்றாக்கும் கல்வி அமைச்சின் முயற்சியை அடுத்து, விவரமான அறிக்கை ஒன்றை யாழ் கல்வித் திணைக்களம் கல்வி அமைச்சுக்கு அனுப்ப இருக்கிறது.

இரு கலாசாலைகளையும் ஒன்றாக்குவது தொடர்பாக தமது கருத்துக்களைக் கூறுமாறு யாழ். தெற்கு வலயத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பிக்கு கொழும்பில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் திரு. குமரப்பெருமாளிடம் அனுப்பி வைத்திருந்தது தெரிந்ததே.

இதனை அடுத்தே யாழ். கல்வித் திணைக்களம் விவரமான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதற்கிடையில் கலாசாலைகளை ஒன்றாக்கும் கல்வி அமைச்சின் முயற்சிக்கு யாழ். கல்விமான்கள் மத்தியில் எதிர்ப்பு உருவாகி வருகிறது.

கலாசாலைகளை ஒன்றாக்கும் முயற்சியைக் கைவிடும்படி கல்வி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். கல்வித் திணைக்களத்தை யாழ். கல்விமான்கள் கோரி வருகின்றனர் என்று தெரியவருகிறது.

கல்வி அமைச்சுக்கு அறிக்கை அனுப்புவதற்கு முன்னோடியாக இந்த இரு கலாசாலைகளிலும் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்களின் விவரங்களை யாழ். கல்வித் திணைக்களம் அந்த இரு கலாசாலைகளின் நிர்வாகங்களிடமும் கோரி உள்ளது.

இந்த இரு கலாசாலைகளிலும் வெவ்வேறு துறைகளே பயிற்றப்படுவதாகவும்—

ஆகவே கலாசாலைகளை ஒன்றாக்கினாலும் அங்கு போதிக்கும் ஆசிரியர்கள் எவரையும் இடம்மாற்றவோ அல்லது பதவி நீக்கவோ முடியாது என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (இ-3)

குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 15

கொக்கட்டிச்சோலை முகாம் இராணுவத்தினரும், ரெலோ நாட்டுப் பகையாளிகளும் இணைந்து சாதாரண உடையில் உழவு இயந்திரத்தில் வந்து இரு பிள்ளைகளின் தந்தை ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் மாவடி முன்மாரி என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அரசடித் தீவு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 24 வயதான செல்லத்துரை சின்னவன் என்பவரே கொல்லப்பட்டவராவார். (ஒ-3)

## அரசியலில் இருந்து சிறிமா எப்போது விலகிச் செல்வார்?

### காலிக் கூட்டத்தில் அவரே விளக்கம்

கொழும்பு, மார்ச் 15

தற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி முறையும் நாடாளுமன்ற அமைப்பும் மாற்றப்பட்ட பின்னரே தாம் அரசியலில் இருந்து விலகப் போவதாக எதிர்க்கட்சித் தலைவரும் சுதந்திரக்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

காலியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினக் கூட்டத்தில் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொது வேட்பாளராக என்னைச் சிலர் சிபாரிசு செய்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் தற்போதைய நாடாளுமன்ற அமைப்பு முறையையும் நான் மாற்றுவேன். அதன் பின்னரே நான் அரசியலை விட்டு விலகுவேன் — என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## ஐ. ஆர். ஏ. தாக்குதலால் மூடப்பட்ட விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டன

லண்டன், மார்ச் 15

தற்காலிகமாக இரண்டு மணித்தியாலங்கள் மூடப்பட்டிருந்த பிரிட்டனின் ஹீத்ரோ மற்றும் காட்விக் விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டன.

ஐரிஷ் குடியரசு இராணுவம் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து இவை மூடப்பட்டிருந்தன.

கடந்த புதன்கிழமை தொடர்ந்து நேற்று முன்தினம் வரை ஹீத்ரோ விமான நிலையத்தின் மீது ஐரிஷ் கெரில்லாக்கள் மூன்று தடவைகள் மோட்டர் தாக்குதல்கள் மேற்கொண்டனர் என்பது தெரிந்ததே. (இ-எ

## உள்ளூராட்சிச் சபைகள் ஏப்ரல் 4இல் இயங்கும்

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளும் வவுனியா நகரசபையும் அடுத்த மாதம் நான்காம் திகதியில் இருந்து செயற்பட ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி விஜேதுங்க அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் பிறப்பித்துள்ளார்.

இந்த உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

முன் கூட்டியே இவற்றை இயங்க வைக்கும் அவசரகாலச் சட்ட விதிகளை ஜனாதிபதி அண்மையில் பிறப்பித்திருந்தார். (இ-எ)

நன்னீர் குளங்களில்

## நுளம்பு குடம்பிகளை அழிக்க "திலாப்பியா" மீன் வளர்ப்பு

நன்னீர் குளங்களில் காணப்படும் நுளம்புகளின் குடம்பிகளை அழிப்பதற்கு மீனினம் ஒன்றை வவுனியாவில் இருந்து இங்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ் மாநகர சபை பகுதியில் 34 நன்னீர் குளங்கள் இருப்பதாகவும், அவற்றில் "திலாப்பியா" என்னும் மீன் இனத்தை விடுவதன் மூலம், நுளம்புப்பெருக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்றும் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி அதிகாரி [illegible] தெரிவித்தார்.

நுளம்பு குடம்பிகளை இந்த மீன் இனம் தமது உணவாக உட்கொண்டு விடுவதால், நுளம்புகள் பெருக்கம் தடைப்பட்டுவிடும் என்றும் அவர் சொன்னார்.

வவுனிக்குளத்தில் "திலாப்பியா" மீனினம் பெருவாரியாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## மலேரியா தடுப்பு வாரத்தில் சிரமதானம், கருத்தரங்குகள்

வலிகாமம் மேற்கு மார்ச் 15

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மலேரியா தடுப்பு வாரத்தையொட்டி சிரமதானம் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா மேற்கொண்டுள்ளார்.

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையில் 18ஆம் திகதி பி. ப. 3மணிக்கும்—

தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையில் 19ஆம் திகதி காலை 10 மணிக்கும்—

மூளாய் அ.மி.த.க. பாடசாலை 19ஆம் திகதி பி. ப. 3மணிக்கும்—

வட்டு இந்துக்கல்லூரியில் 20ஆம் திகதி காலை 10மணிக்கும்—

சித்தன்கேணி கணேசவித்தியாசாலையில் 20 ஆம் திகதி பி ப 3 மணிக்கும்—

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையில் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கும் —

அராலி வள்ளியம்மை வித்தியாசாலையில் 21 ஆம் திகதி பி-ப. 3 மணிக்கும் —

அராலி இந்துக் கல்லூரியில் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கும் —

சங்கானை அ.மி.த.க. பாடசாலையில் 23ஆம் திகதி பி.ப. 3 மணிக்கும்— இதனையொட்டிய சுகாதாரக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில் நடைபெறவுள்ள கருத்தரங்குகளில் அவ்வப் பகுதி மக்களையும் அயல்கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்களையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-175)

# உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் மே மாதம் நடைபெறுவதும் சந்தேகம்

### செலவினங்களை குறைக்கும் கோரிக்கையை நிறைவேற்ற இலங்கை பின்னடிப்பு

கொழும்பு, மார்ச் 15

பாரிஸில் கடந்த மாதம் நடைபெற இருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற இருந்தது. பணவீக்கத்தைக் குறைக்கும் படியும்—

யுத்தச் செலவை நிறுத்தும் படியும்—

அரசாங்க செலவுகளைக் குறைக்கும் படியும்—

உதவி வழங்கும் நாடுகளும் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் விடுத்த கோரிக்கைக்கு இலங்கையிடமிருந்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் காணப்படாததை அடுத்து மே மாதத்துக்கு இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

தற்போது இக் கூட்டத்தை மே மாதத்துக்குப் பின்னரும் தள்ளிப் போட உதவி வழங்கும் நாடுகள் முயற்சிப்பதாகத் தெரிகிறது.

செலவுகளைக் குறைக்கும்படி விடுத்த கோரிக்கைகளுக்கு இலங்கையிடமிருந்து இன்னும் சாதகமான நடவடிக்கைகள் இல்லாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், இலங்கைக்கு எதிர்பார்த்த நிதி உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாலேயே இந்த ஆண்டு, வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்காமல் வெறும் கணக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க அரசு முடிவு செய்திருப்பதாக மத்திய வங்கியின் தகவல்களை ஆதாரம் காட்டி சிங்கள வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காமல் விடுவதற்கு அரசாங்கம் தேர்தல் ஆண்டைக் காரணம் காட்டவே முயற்சிப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆண்டான 1989 ஆம் ஆண்டும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை என்றும் அதற்கு உண்மையான காரணம் அன்றைய ஜே. வி. பி. குழப்ப நிலையே என்றும் மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. (இ-9

## மண்மீட்பு போருக்கு மகளை ஒப்படைத்தார் தந்தை!

யாழ்ப்பாணம், மார்ச் 15

தாயக மண் மீட்புப் போருக்காக தமது பெற்ற மகளை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தார் தந்தை ஒருவர்.

வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து நாவாந்துறையில் வசிக்கும் திரு. சிவரத்தினம் என்பவரே மகளை விருப்பத்துடன் ஒப்படைத்த அந்தத் தந்தை ஆவார்.

கடந்த 12ஆம் திகதி கலைச்செல்வி (21 வயது) என்ற தமது மகளை இயக்கத்தில் இணைத்து அனைவருக்கும் முன்மாதிரியாக நடந்து கொண்டுள்ளார் அந்த தந்தை. (ஒ)

தேர்தல் திணைக்களத்தின்

## உயர்மட்டக் குழுவினர் மட்டக்களப்புக்கு விஜயம்

கொழும்பு மார்ச் 15

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து கூறப்பட்டுள்ள புகார்கள் பற்றி ஆராய்வதற்காக தேர்தல் திணைக்களத்தின் உயர்மட்ட குழு ஒன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளது.

புகார்கள் தெரிவிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளில் கடமை ஆற்றிய அரச ஊழியர்களையும், பொலிஸாரையும் உயர்மட்ட விசாரணைக் குழு விசாரணை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ 5)

## பண்ணிசை, பேச்சு போட்டிகள்

வடமராட்சி, மார்ச் 15

சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசை தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசை, பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது பாடசாலை ஊடாக விண்ணப்பிக்குமாறு மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் அறிவித்துள்ளது. (ஒ-173)

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளில்

# ஆங்கிலப் பாடத்தை கட்டாயம் போதிக்க வேண்டும்

### கல்வித் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. (உயர்தர) வகுப்பில் ஆங்கிலம் கட்டாயமாக போதிக்க வேண்டும்.

யாழ். கல்வித் திணைக்களம் சகல பாடசாலைகளுக்கும் சுற்று நிருபம் மூலம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

மாதம் 20 மணித்தியாலங்கள் ஆங்கிலப்பாடம் போதிக்க வேண்டும் என்றும் —

பாடசாலை நேரத்தில் போதிக்க முடியாது விட்டால் விசேட வகுப்புக்களை நடத்த வேண்டும் என்றும் — பாடசாலைகள் கேட்கப்பட்டுள்ளன.

இதற்கான பாடத்திட்டம் தயாரிக்கப்படுவதாகவும் — அடுத்த வாரத்தில் பாடசாலைகளுக்கு அவை அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆங்கிலப்பாடம் பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையில்லையாயினும், ஆங்கிலப் பாடம் கட்டாயம் போதிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை, கல்வி அமைச்சு யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி இருந்தது. (ஒ-3)

## இரட்டைச் சிசுக்களில் ஒன்றை கருவறையில் விட்டுத் தைத்தனர்!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 15

பிரசவ வேதனையுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்ற தாய்க்கு சத்திர சிகிச்சை மூலம் ஆண் குழந்தை ஒன்று பிரசவிக்கப்பட்டது.

சத்திர சிகிச்சையை செய்த டாக்டர், ஒரு குழந்தை பிறந்தவுடன், தையல் போட்டு சிகிச்சையை முடித்துக் கொண்டார்.

வார்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட அந்த தாய் அடியாய்த் துடித்தார். அவருக்கு பொறுக்க முடியாத வலி.

அவர் மீண்டும் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டார் அவரது கருவறையில் இன்னும் ஒரு சிசு இருப்பது தெரிய வந்தது மீண்டும் தையல் பிரிக்கப்பட்டது. அவருக்கு அவசர அவசரமாக இரண்டாவது தடவையாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாவதாகவும் ஆண் குழந்தையே பெற்றெடுத்தாள் அந்தத் தாய்.

மட்டக்களப்பு மாவட்ட ஆஸ்பத்திரி ஒன்றில் இந்த பரபரப்பான சம்பவம் இடம்பெற்றுள்ளது. குருக்கள் மடத்தைச் சேர்ந்த தாய் ஒருவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

சில நிமிடங்கள் பிந்தியிருந்தால் வயிற்றில் இருந்த குழந்தையுடன் தாயும் இறந்திருக்கலாம் என்று பின்னர் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணுக்கு கர்ப்பம் ஏற்பட்ட பின் பல தடவைகள் கிளினிக்குக்குச் சென்று வந்தபோதும் வயிற்றில் இரட்டைப் பிள்ளைகள் இருப்பது குறித்து டாக்டர்கள் கண்டு பிடிக்கவில்லையாம். (ஒ-3)

# தமிழீழத்தில் பெண் விடுதலைக்கு முக்கியத்துவம் தர வேண்டும்

### மகளிர் தினவிழாவில் காவல்துறைப் பொறுப்பாளர்

"தேசியப் போராட்டத்தை நடத்தும் அதே வேளையில் சமூக விடுதலைக்கான போராட்டத்தையும் தமிழீழத்தில் நாம் நடத்த வேண்டும். சமூக விடுதலையில் குறிப்பாக பெண் விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்."

பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினவிழாவில் உரையாற்றிய தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இவ்வாறு கூறினார்.

வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி மலையரசி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மகளிர்படையணித் தளபதி செல்வி மிதுஷா ஈகைச்சுடர் ஏற்றி வைத்தார்.

அங்கு திரு. நடேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் அல்ல ஆணாதிக்கத்தின் அரியாமைக்கு எதிராக நடக்கும் புரட்சிகரமான சித்தாந்த ரீதியிலான ஒரு போராட்டம் ஆகும் இக்கருத்துக்களை ஆண்கள் மனதில் புகுத்தி பெண் விடுதலையை ஏற்படுத்துவது தான் எமது அமைப்பின் பணியாகும்.

ஒரு ஆணும் பெண்ணும் ஆழமான புரிந்துணர்வின் மூலம் தான் சமத்துவத்தை நிலை நாட்ட முடியும். மனித இயக்கத்தின், மனித உயிர்களின் இயங்கு சக்தி ஆண் மட்டுமல்ல; பெண்ணும் இருந்தால்தான் இந்த உலகம் இயங்கும் என்ற புரிந்துணர்வு ஒவ்வொரு ஆணிடத்திலும் உருவாகும் போது தான் நாம் உண்மையான பெண் விடுதலையை அடைந்தவர்களாகக் கருதலாம்.

மதிப்பிற்குரிய எமது தேசியத்தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் சேர்ந்த சமூக விடுதலைப் போராட்டத்தின் மூலம்தான் எமது பெண்ணினம் உண்மையான விடுதலையை அடைய முடியும் என்றார் அவர்.

இக்கூட்டத்தில் தமிழீழக் காவல்துறையைச் சேர்ந்த அமுதேஸ்வரி திருமதி சரோஜா சிவச்சந்திரன், பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி சுடரவள் ஆகியோரும் உரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (க-173)

வனமின்றிப் போனால் - நம் இனமின்றிப் போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

இளாலி இர்சரையில் இல. 44, பெர்ணாண்டோ வீதி, வெள்ளவத்தைக்கு விலாசமிட்ட தபாலுறையில் ஒரு பெரிய புகைப்படமும், வேறுசில படங்களும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரயாணத்தின் போது தவறிவிட்டன. தபாலுறையைக் கண்டு எடுப்பவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்;

அ. வரதராஜா (அழகு)
645, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(29912)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா செல்லையா

திருமதி இராசம்மா செல்லையா 14-03-94 திங்கள் அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்லையாவின் (இந்து சாதனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, பாலசிங்கம் (சந்தரோடை, முன்னாள் ஊழியர், உதயன்), தில்லைநாதன் உடுவில், (இளைப்பாறிய அதிபர்), குஞ்சிதபாதம் (ஆசிரியர் யா / திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலை) பூவிலிங்கம் (இளை முகாமையாளர் வலி கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்), குகதாசன் (பொறுப்பதிகாரி, வலி. கிழக்குப் பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தம்பையா (ஓய்வுபெற்ற நீதிமன்ற பிஸ்கால் ஊழியர்), மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, மனோன்மணி, காலஞ்சென்ற பத்மாவதி, திலகவதி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (15-03-94) செவ்வாய்க்கிழமை பி. ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. குகதாசன்
(மகன்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(29913)

### திருமதி நல்லையா மனோன்மணி

(சின்னம்மா)

திருமதி நல்லையா மனோன்மணி (சின்னம்மா) காலமானார்.

உரும்பிராய் வடக்கு காலஞ்சென்ற வே. நல்லையாவின் (மலாயன் பென்சனியரும், சமூக சேவையாளரும்) அன்பு மனைவியும், குமாரதேவா, நரேந்திரா, நடராசா, புனிதவதி, பார்வதி (றியோ) ஆகியோரின் சிறிய தாயும், மங்கையர்க்கரசி, பராசக்தி, காலஞ்சென்ற ஆறுமுகதாஸ், கணேசலிங்கம் (வங்கி முகாமையாளர், வலி கிழக்கு நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், டாக்டர் இந்திரராணி, அருந்ததி, கோசலா, ராமலிங்கம், சாம்பசிவம், சிவஞானம், கந்தசாமி, திருக்குமாரி (சை. த. வி. உ ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், சிவகுமார் (நோர்வே), சிவநேசன் (ஜேர்மனி), சிவராம் (உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சிவசங்கர் (கனடா). சிவதாஸ் (கனடா), சபாரஞ்சன் (ஆசிரியர்), சக்திதரன், சக்திகலா, கஜேந்திரன், காயத்திரி, கௌசிகா, மதியரசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ந. கணேசலிங்கம்
(மகன்)

''சிவபதி''
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்

(29915)

### திருமதி கமலாதேவி கிருஷ்ணபிள்ளை

திருமதி கமலாதேவி கிருஷ்ணபிள்ளை 14-03-94-ம் திகதி காலமானார் இவர் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (சுவிஸ்), ரஞ்சினி. சாந்தினி, சுபாசினி, சுவேந்திரன், சிவபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-3-94 பி. ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முள்ளிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. கிருஷ்ணபிள்ளை

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

(29916)

### திருஞானசம்பந்தபிள்ளை முத்துக்குமாரசாமி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருஞானசம்பந்தபிள்ளை முத்துக்குமாரசாமி நேற்று (14-03-1994) காலமானார்.

இவர் வாலாம்பிகை, சிவகாமசுந்தரம், திருஞானசம்பந்தபிள்ளை (அதிபர், இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ.வை. பொன்னம்பலத்தின் (காரைநகர்) மைத்துனரும், க. பஞ்சாட்சரம், சௌந்தராம்பிகை ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியை 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் இன்று (15-03-94) பி ப. 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

தகவல்;
மு. திருஞானசம்பந்தபிள்ளை
(மகன்)

(7136)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## இன்று

யாழ். புனித மரியாள் வித்தியாலய மாணவர் நலன்புரிச் சங்க

நிதிக்காக

4 ஆவது மேடையாக

வித்தியாலய மாணவர் வழங்கும்

செல்லையா - மெற்றாஸ் மயில் நெறியாள்கையில்

## காத்தவராயன்

தலைவர்:
திரு. சி. தார்சீசியஸ்
(அதிபர், யாழ் புனித மரியாள் வித்தியாலயம் O. L. R. யாழ்ப்பாணம்)

முதன்மை விருந்தினர்:
கலாநிதி க. குணராசா
(பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:
செல்வி எஸ். கலைமணி
(பொறுப்பாளர் கலைபண்பாட்டுக் கழகம் மகளிர் அமைப்பு)

காலம்: 15 - 03 - 1994 செவ்வாய் மாலை 6-30 மணி

இடம்: புனித மரியாள் வித்தியாலய (O L.R.) திறந்தவெளி அரங்கு

அன்பளிப்பு: ரூபா 10 மட்டும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:



எஸ்-எம்-பெரஞன்டோ

580. ஆஸ்பத்திரி வீதி.
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

(சி-7559)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| தோற்ற | | மறைவு |
|---|---|---|
| 06 | | 13 |
| 01 | | 02 |
| 192 | | 1994 |



### திருமதி சரஸ்வதி அருணாசலம்

எங்கள் உயிரே எங்கள் அம்மா
அப்பாவும் அம்மாவுமாக எம்மை ஆதரித்த தெய்வமே
ஒன்றென்ன ஓராயிரம் மாதம் சென்றாலும்
அகலாது உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு
அன்பான மனமும் பண்பான பழக்கமும்
மனமாரச் செய்யும் செயலும்
ஓய்வு என்றிருக்காமல் தேவை என்றால்
தேடி ஓடி வந்து செய்யும் சிறப்பான செயலும்
மாதம் ஒன்று சென்றும் மறையவில்லையம்மா
கனவிலும் நனவிலும் காணுமிடமெங்கும்
கண்ணிலும் கருத்திலும் நிறைந்திருக்குமெங்கள் அம்மா
இன்னும் சில காலம் வாழ்ந்திருக்கக் கூடாதா
காலனவன் கண்பட்டு கடுகதியாய் சென்றதென்ன
எம் இறைவன் சிவன் பாதத்தில்
ஆனந்தமாய் அமர்ந்திருக்க
அனுதினம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று செவ்வாய்க்கிழமை (15-03-94) எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

உசன்,
மிடத்தற்பனை,
மிருசுவில்.

(7134)

## ஆலயங்களில்

தென்மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி கோயில் இலட்சார்ச்சனை இன்று 15 ஆம் திகதி நடைபெறும்.
(க-30)

★ ★ ★

கைதடி வடக்கு சக்திபுர வேல்முருகன் ஆலய மணவாளக்கோலம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு திருவிழா நிறைவுபெறும். விஷேட அபிஷேகங்கள் நடைபெற்று வசந்த மண்டப பூஜை, சுவாமி திருவீதி வரும் காட்சி ஆகியனவும் இடம் பெறும்.
(9)

★ ★ ★

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் கோயில் மகோற்சவம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ரதோற்சவம் 29ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் மறுதினம் 30 ஆம் திகதியும் நடைபெறும்.
(க)

★ ★ ★

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி ஆலய இலட்சார்ச்சனை நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
(க-117)

★ ★ ★

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் கோயில் விளக்கேற்றும் வைபவம் இன்று நடைபெற்று தொடர்ந்து 7 நாட்கள் விசேட வழிபாடும், கூட்டுப் பிரார்த்தனைகளும் இடம்பெற்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பொங்கல் உற்சவம் நடைபெறும்.
(த-28)

## பாடசாலைகளில்

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

அதிபர் திரு. செ. யோகச்சந்திரன் தலைமையில் கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறும் போட்டியில் முன்னாள் அதிபர் திரு. கோ. செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.
(க-155)

★ ★ ★

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.
(க-117)

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி. நாகராசா தலைமையில் நடைபெறும்.
(க-117)

## விளையாட்டு நிகழ்வு

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் வலி. மேற்கு வலய உதைபந்தாட்டச் சங்கத்தின் கழகங்களுக்கிடையில் சின்னசுதா விளையாட்டரங்கில் நடாத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 3 மணி முதல் நடைபெறும்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யங்ஹேரோஸ் அணியை எதிர்த்து அராலி, சில்வஸ்ரார் அணி மோதும்.

இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை சிவன் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிசியன் அணி போட்டியிடும்.

பலாலி—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக தப்பினர்.

வல்வை மகளிர் வித்தியாலயத்தில் விழுந்த ஷெல்லினா அங்குள்ள குப்பைமேடு எரிந்து சாம்பரானது.

நேற்று முன்தினம் இரவு 9 20 மணியளவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் அதிர்ச்சியினால் உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த இராமலிங்கம் அருட்செல்வம் (வயது 47) என்பவர் மரணமானார்.

இதேசமயம் —

நேற்றும் காலை 8 45 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து தொண்டமானாறுப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சு இடம்பெற்றது.

இந்த ஷெல்கள் தொண்டமானாறு பெரிய கடற்கரைப் பரப்பிலும் கடலிலும் விழுந்து வெடித்தன. இதனால் கரையோரப் பகுதி வீடுகள் சிறிது சேதமுற்றன.
(உ-155-173)

## அச்சகம் சீல் வைப்பு

கொழும்பு, மார்ச் 15

போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றை அச்சிட்டதாகக் கருதப்படும் அச்சுக்கூடம் ஒன்றை பாணந்துறைப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

முஸ்லிம்களின் பெயர்களில் அச்சிடப்பட்ட இந்தச் சான்றிதழ்களும், பத்திரங்களும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் நம்புவதாகவும்—

சம்பந்தப்பட்ட அச்சகம் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும்—

நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

மணலாறுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு 12.45 மணியளவில் ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் புகழேந்தி அல்லது சுனாம் (இராசையா இராமச்சந்திரன் — திருகோணமலை) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.
(உ-த)

ஈழ—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் மக்கள் படும் இன்னல்களையும், அவலங்களையும் நேரில் காண முடிந்தது. மக்கள் ஒரே சோகமாகக் காணப்படுகிறார்கள்.

இவர்கள் படும் இன்னல்கள் போதாது என்று புதிய அகதிகளையும் அங்கு அனுப்பப் போகிறீர்களா என்று சுவிஸ் அரசிடம் கேள்வி எழுப்புவோம். அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று அழுத்தமும் கொடுப்போம்.

இலங்கை வந்த எமது தூதுக்குழு நாடு திரும்பியதும் அரசுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து, மக்களின் இன்னல்களை, அவலங்களை தெரியப்படுத்தும்— என்றார்.

சுவிஸ் தூதுக்குழு கொழும்பில் அரச அதிகாரிகளுடனும், புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடனும், அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தியதாகவும்—

தூதுக்குழுவைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தனர் என்றும்— திரு. சிமித் மேலும் தெரிவித்தார்.
(அ-3)

சுராலைத்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆபத்தான நோய்கள் ஏற்படும்.

எனவே எலிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி, அவற்றை அழிக்கும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## பெண்ணின் சடலம் மீட்பு

சாவகச்சேரி, மார்ச் 15

சங்குப்பிட்டி பூநகரியன் கண்டி என்ற இடத்தில் அடையாளம் காணப்படாத இளம்பெண் ஒருவரின் சடலத்தை அப்பகுதிப் பொது மக்கள் நேற்றுக் காலை மீட்டனர்.

நகைகள் அணிந்து காணப்பட்ட இந்தச் சடலம் இனம் காணப்படுவதற்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது.
(உ-31)

## மத்திய கல்லூரி 175ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ் மத்திய கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாவும் யாழ். மத்தியம் சிறப்பு மலர் வெளியீடும் இன்று செவ்வாய் பிற்பகல் 12-30 மணிக்கு தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் திரு நா. க. சண்முகநாதன் தலைமை உரையையும் —

இணை ஆசிரியரும், முன்னாள் பிரதி அதிபருமான திரு. வே. ஐயாத்துரை வெளியீட்டுரையையும் —

பேராசிரியர் வி. நவரெத்தினராசா ஆய்வுரையையும் நிகழ்த்துவார்கள்.

இணையாசிரியர் திரு. கா. மாணிக்கவாசகர் விளக்கவுரை நிகழ்த்துவார்.
(தி)

இலங்கை—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், 320 பேருக்கு ஒருவர் பொலீஸ்காரர், 170 பேருக்கு ஒருவர் இராணுவச் சிப்பாய் ஆக உள்ளனர் என்றும் அந்தக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

தெற்கே—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும்வரை தமது விஜயத்தை அருட்தந்தை ஒத்தி வைக்க வேண்டும்.''

— இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று மேய்ப்புப்பணி மாநாட்டின் முடிவில் எடுக்கப்பட்டதாகவும் —

இத்தீர்மானத்தின் பிரதி உடனடியாக வத்திக்கானுக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் அறியவந்தது.

இதற்கிடையில் —

மேய்ப்புப்பணி மாநாடு தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் —

யாழ் மன்னார் ஆயர்களின் ஆசியுடனும், மாநாட்டுக் கொடி, பப்பரசரின் கொடி ஆகியவை இறக்கப்படும் நிகழ்வுடனும் மேய்ப்புப்பணி மாநாடு நேற்று சம்பிரதாயபூர்வமாக முடிவுற்றது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 8 ஆம் திகதிமுதல் இந்த மாநாடு சென்பற்றிக்ஸ் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்று வந்தது தெரிந்ததே.
(உ-9)

## அரசாங்க குடும்ப நல உத்தியோகத்தர் சங்கம் விடுக்கும் அறிவித்தல்

சகல அரச குடும்ப நலசேவை உத்தியோகத்தர்களுக்கும், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் (Field & Institution) வெளிக்கள, வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் துவிச்சக்கரவண்டி பெறுவதற்கு அனுமதி கிடைத்துள்ளமையினால் இதுவரை அறிவித்தல் கிடைக்காத துவிச்சக்கரவண்டி பெற விரும்பும் குடும்பநலசேவை உத்தியோகத்தர்கள் 21-03-94 இற்கு முன்பு கு. ந. சே. உ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
கு. ந சே. உ. சங்கம்,
குமாரலிங்கம் வீதி,
இணுவில்.

(29908)

## கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற மன்னார் உதவி அரசாங்க அதிபரும், கற்குளி கந்தசுவாமி கோயில் ஆலய பரிபாலனசபை போசகருமான

### அமரர் செ. குமாரசுவாமி

அவர்களின்

பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- இந்து இளைஞர் மன்றம்.

கற்குளி கந்தசுவாமி கோயில். [29903]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org